# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No.CC.121/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Deposition of Witness for | : | |
| Prosecution | : | |
| Defence | : | அ.சா.1 |
| Name | : | . சுபாசினி |
| Father’s Name | : | . தட்சணாமூர்த்தி |
| Village | : | . மும்முனி |
| Taluk | : | . வந்வாசி |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | . 38 |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of 22.08.2025.

1 முதல் 4 எதிரிகள் ஆஜர். குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். 1ம் எதிரி தட்சிணாமூர்த்தி எனது கணவர், 2ம் எதிரி மாமனார், 3ம் எதிரி மாமியார், 4ம் எதிரி எனது கணவரின் தங்கை. எனக்கும் எனது கணவருக்கும் தனித்தனியே முதல் திருமணம் நடைபெற்று விவாகரத்தாகி எங்களுக்கு கடந்த 27.08.2015ம் தேதி பெரியோர்கள் நிச்சயத்த திருமணம் திருத்தனி முருகன் கோவிலில்

நடைபெற்றது. எனக்கு திருமணத்தின்போது 15 சவரன் நகையும், 1ம் எதிரிக்கு 3 சவரன் நகையும் எனது பெற்றோர் போட்டார்கள். ரூபாய் 60,000/. பைக் வாங்குவதற்காக கொடுத்தார்கள். தீபாவளிக்கு 1/2 சவரன் மோதிரம் போட்டார்கள்.

திருமணத்தின் விளைவாக எங்களுக்கு 07.04.2017ம் தேதி மதுமித்திரா என்ற பெண்குழந்தை உள்ளது.

1ம் எதிரிக்கு வெளியே பெண்கள் தொடர்பு இருந்தது. திருமணம் ஆன 2, 3 மாதத்தில் எதிரிகள் வீடு கட்டுவதற்காக பணம் ரூபாய் 5 லட்சம் வேண்டும் என்று என்னிடம் கேட்டார்கள். என்னிடமிருந்த நகைகளை கேட்டார்கள் எதிரிகள் என்னை அடித்து துன்புறுத்தியதால் 10 சவரன் நகையை அவர்களிடம் கொடுத்துவிட்டேன். மேற்படி நகையை எதிரிகள் 2016ம் வருடம் மே மாதம் வாங்கினார்கள். அந்த நகையை எதிரிகள் விற்றுவிட்டார்கள்.

எனக்கும் எனது குழந்தைக்கும் உடல்நிலை சரியில்லாத சமயத்தில் எதிரிகள் என்னை எனது பெற்றோர் வீட்டிற்கு அனுப்பி வைத்துவிடுவார்கள். எனக்காக செலவு செய்யமாட்டார்கள். எனது பெற்றோர் எனக்கு செலவு செய்து அனுப்பி வைப்பார்கள்.

எனது மாமியார் எனது கணவரிடம் எத்தனை பெண்களை வேண்டுமானாலும் வைத்துக்கொள். ஆனால் எனக்கு வேலை செய்கின்ற மாதிரி பெண்ணிருந்தால் போதும் என்று அடிக்கடி சொல்வார். எனது மாமியார் எனது கணவரிடம் என்னை அடித்து அங்கு இறந்துவிட்டால் அவர்களுக்கு பிரச்சனை வரும் அதனால் அவர்கள் வீட்டிற்கே அனுப்பிவிடு என்றும் தூண்டிவிடுவார்.

எனது மாமனார் எனது வீட்டில் இருந்து அரிசி, பருப்பு உள்ளிட்ட அனைத்து பொருட்களும் கொண்டுவரவேண்டும் என்றும், எனது பெண்ணிற்கு நான் அவ்வாறுதான் செய்கிறேன் அதனால் என்னையும் அவ்வாறு செய்யவேண்டும் என்று சொல்வார்.

எனது நாற்றநாள் அவருக்கென்று உள்ள வீட்டினை விட்டு விட்டு நாங்கள் வசிக்கும் வீட்டிற்கு வந்து இருந்து அடித்து துன்புறுத்துவார்.

எனது கணவர் எனக்கு அவரது வீட்டில் எந்த உரிமையும் கொடுக்கவில்லை. அவரது அப்பா, அம்மா இறந்த பின்புதான் எனக்கு உரிமை வரும் என்று சொன்னார். என்னிடமும், எனது குழந்தையிடமும் பாசத்தை காட்டமாட்டார். வெறுப்பைதான் காட்டுவார்.

எனது கணவர், நான் அவருடன் வசித்து வந்த பட்டாபிராம்-ஆவடி வீட்டில் இருந்து என்னை 07.02.2020ம் தேதி அடித்து எனது வீட்டிற்கு துறத்திவிட்டார். என்னுடன் என் குழந்தையையும் அனுப்பி வைத்துவிட்டார். பின்பு அங்கேயே வேறொரு பெண் ராஜேஸ்வரியை 3வதாக திருமணம் செய்துகொண்டார். இது சம்மந்தமாக நான் கேட்டதற்கு நான் வாழமாட்டேன் என்று கூறிவிட்டார். அவர் எங்கள் வீட்டிற்கு வந்து அவர்மீது புகார் கொடுத்தால் உயிருடன் விடமாட்டேன் என்று மிரட்டினார். பின்பு நான் வந்தவாசி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் 24.08.2021ம் தேதி புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் அந்த புகார் அ.த.சா.ஆ.1 ஆகும். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

மனுவின்பேரில் ஒத்தி வைக்கப்பட்டது.